# BSNL அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்கள்
# தமிழ் மாநிலம்.

தமிழகத்தில் BSNL அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களின் சார்பாக, BSNL பங்கு விற்பனை எதிர்த்து இயக்கம் நடத்துவது சம்பந்தமாக ஆலோசனை கூட்டம் 16.11.2009 அன்று சென்னையில் தோழர் எஸ்.சுந்தரகிருஷ்ணன் மாநிலத்தலைவர் SNEA தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில்BSNLEU. NFTE (BSNL), FNTO,TEPU, SEWA BSNL மற்றும் SNEA, AIBSNLEA ஆகிய சங்கங்களின் மாநில செயலாளர்கள் கலந்து கொண்டனர். மத்திய அரசு சமீபத்தில் லாபம் ஈட்டும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்கும் முடிவை எடுத்துள்ளது. BSNL நிறுவனத்தின் பங்குகளை விற்கும் மத்திய அரசின் முடிவினை எதிர்த்து தமிழகத்தில் அனைத்து சங்கங்களும் ஒன்றிணைந்து கீழ்க்கண்ட இயக்கங்கள் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

**<u>முடிவுகள்</u>**

1. டிசம்பர் 4 ஆம் தேதி அனைத்துக் கிளைகளிலும் ஆர்ப்பாட்டம்.

2. டிசம்பர் 16. 2009 அன்று அனைத்து மாவட்டத் தலை நகரங்களிலும் பெருந்திரள் கண்டனக் கூட்டம் நடத்துவது. அதில் மற்ற பொதுத்துறை நிறுவன சங்கத்தலைவர்கள், சட்டசபை உறுப்பினர் உட்பட அனைவரையும் அழைத்து சக்தியாக நடத்துவது. பத்திரிக்கை, தொலைக்காட்சி ஆகியவற்றை அழைத்து இயக்கம் நடத்துவது.

3. தமிழகம், புதுவை உள்ளிட்ட 40 பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், BSNL பங்கு விற்பனையை கைவிடக்கோரி மகஜர் அளிப்பது. இந்த இயக்கத்தில் அனைத்து மாவட்டச் செயலாளர்களையும் இணைத்து மகஜர் அளிப்பது. (மாநில அமைப்பிலிருந்து மகஜருக்கான கடிதம் அனுப்பப்படும்)

4. பங்கு விற்பனை பற்றி ஊழியர்களிடம் பிரசாரம் செய்ய உதவியாக மாநிலத்திலிருந்து 10,000 நோட்டீஸ் அடித்து மாவட்டங்களுக்கு அனுப்புவது.

BSNL பங்கு விற்பனை என்பது மக்களின் சொத்தை தனியாருக்கு தாரைவார்க்கும் மத்திய அரசின் நயவஞ்சக திட்டமாகும். தமிழகத்தில் அரசின் முயற்சியினை முறியடிக்க ஆர்த்தெழுவோம். போராடுவோம்.

தோழமையுடன்,

| | | | |
|---|---|---|---|
| **S.செல்லப்பா**<br>(BSNLEU) | **R.பட்டாபிராமன்**<br>(NFTE (BSNL) | **D.சந்திரசேகர்**<br>(FNTO) | **A.செல்லப்பாண்டி**<br>(TEPU) |
| **P.N.பெருமாள்**<br>(SEWA BSNL ) | **J.பிரசாத்**<br>(AIBCTES) | **அசோகன்**<br>(SNEA) | **N.வீரபாண்டியன்**<br>(AIBSNLEA) |